Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.81/2025**

Preliminary Register

Deposition of **PW- 6 LW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் | Father Name | : | அண்ணதுரை |
| Village | : | | Taluk | : | ராஜபாளையம் |
| Age | : | 32 | Calling | : | காவல் உதவி ஆய்வாளர்- தளவாய்புரம் காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of May 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம், தளவாய்புரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.06.2025ம் தேதி காலை 12.00 மணியளவில் நிலையப்பொறுப்பிலிருந்தபோது அ.சா.1 மணிகண்டன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையக் குற்ற எண்.179/2025, ச/பி.329(4), 296(b), 118(1), 351(3) of BNS ன் படி **முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்தேன். அது **அ.த.சா.ஆ. 4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே பகல் 12.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கணேசன், ரெத்தினம் ஆகியோர் முன்னிலையில் சம்பவியிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்துள்ளார். அவை முறையே **அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் மணிகண்டன், மாரிமுத்து, கீதா, கணேசன், ரெத்தினம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மையென்று தெரியவரவே இவ்வழக்கில் சம்பந்தபட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரி தினேஷ்குமார் என்பவரை அன்றைய தினமே 14.00 மணிக்கு விருப்பாட்சிபுரம் பேருந்து நிலையம் அருகில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மற்றொரு எதிரியை தேடியபோது அவர் முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார் என்ற விபரம் தெரியவந்தது. அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு. வரதராஜன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அசா.1க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று காயச்சான்று பெற்றுள்ளேன். அது **அ.த.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் எதிரிக்கு எதிரான விசாரணையை முடித்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

இவ்வழக்கில் குற்ற நிகழ்வு நாள் என்பது 10.06.2025, இரவு 22.00 மணி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு பதிவு செய்யப்பட்டது 12.06.2025, 12.00 மணி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். 2 நாட்கள் காலதாமதத்திற்கான காரணம் குறித்து புகாரிலோ, வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் அ.சா.1 முதல் 3 வரையானவர்கள் வலங்கைமான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். வலங்கைமான் அரசு மருத்துவமனை மருத்துவரை விசாரணை செய்து விபத்து பதிவேடு எதுவும் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கூட்டத்தில் கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்று கூறியதால்தான் மேற்படி விபத்து பதிவேடுகளை வழக்கில் தாக்கல் செய்யாமல் திட்டமிட்டு மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையிலும் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலத்திலும் "மற்றும் சிலர் சேர்ந்து குற்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக" கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த மற்றும் சிலர் யார் என்றும் அவர்கள் குற்ற நடவடிக்கையில்

ஈடுபட்டார்களா என்று விசாரித்து இவ்வழக்கில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அ.த.சா.ஆ.7 காயச்சான்றில் கத்தியால் தாக்கப்பட்டதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.2க்கு கண்ணில் காயம் ஏற்பட்டுள்ளதாகதான் சாட்சிகள் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.7ல் கண்ணத்தில் காயம் ஏற்பட்டுள்ளது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் வரைபடத்தில் கண்டுள்ள அருகாமையில் உள்ள நபர்களை சாட்சிகளாக சேர்த்து வாக்குமூலம் எதுவும் பதியப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தனது முதல் விசாரணையில் கூறியுள்ள, "நானும் எனது மனைவி அபிநயா மற்றும் எனது கை குழந்தையுடன் சென்றோம். சாமி கும்பிட்டு கொண்டிருந்தபோது சீனு என்கிற ராஜேஸ் மற்றும் அவரது நண்பர் தினேஷ் மற்றும் சிலர் ஆகியோர்கள் எங்களை பார்த்து யாரும் சாமி கும்பிடக்கூடாது என்று கூறினர். ஊர் பெரியவர்கள் அவர்களிடம் இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபடாதீர்கள் என்று கூறினார்கள், ஆனால் அவர்கள் அதை கேட்காமல் சண்டையில் ஈடுபட்டார்கள். அங்கு வந்த எனது சித்தப்பா மாரிமுத்துவை சீனு என்கிற ராஜேஸ் கையால் அடித்தார். பின்னர் அங்கிருந்தவர்கள் மறித்து விட்டார்கள்". என்று புகாரிலோ அல்லது என்னிடம் கொடுத்த வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான், அவர் எனது விசாரணையில் அ.சா.1 சாமிகும்பிட சென்றபோது ஆஜர் எதிரிகள் சாமி கும்பிட விடாமல் பிரச்சனை செய்ததாகவும், அதை கேட்ட அ.சா.1 ன் சித்தப்பாவை ஆஜர் எதிரிகள் அடித்ததாகவும் ஊர் பெரியவர்கள் சமாதானம் செய்து வைத்து அனுப்பியதாகவும் கூறினார். அ.சா.2, 1ம் எதிரி தன்னை நகத்தினால் கண்ணத்தில் குத்தி விட்டார் என்று எனது விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தடயப்பொருளாக ஆயுதம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் சம்பவயிடத்திற்கு நேரடியாக சென்று விசாரணை செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் என்னால் வழக்கிற்காக பொய்யாக

தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் ஏதும் பெறப்படவில்லை என்றாலும் வழக்கு ஏதும் பதிவு செய்யப்படவிலலை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. முன்விரோதம் காரணமாக கொடுத்த பொய்புகாரின் மீது எவ்வித விசாரணையும் செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.05.14 15:13:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.